**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT, UTHIRAMERUR.**

**OS. NO.110/2013**

| | |
|---|---|
| Name: **கோவர்தனன்** | Caste: |
| Father's Name:<br>Husband Name : | Calling: |
| Village:. | Religion: |
| Taluk: | Age: |
| The Oath was administered to the witness by Tmt.L.Meerabai, Gr.III, BC and was solemnly affirmed by the witness in accordance with the provisions of the Oaths Act of 1969 on 05.02.2026 | |

**<u>05.02.2026</u>**

**விசாரணை தொடங்கிய நேரம் 12.57 PM**

**நீ.ம.சா.1 – வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நீ.ம.சா.ஆ.3 ல் பக்கம் 9 ல் உள்ள பொது அறிவிப்பினை யார் அனுப்பியது என்றால் கிராம நிர்வாக அலுவலர் சாத்தனாஞ்சேரி கூடுதல் பணியாக பினாயூர் கிராமத்தை பார்த்துக்கொண்டு இருந்த அலுவலர் அனுப்பியுள்ளார். பொதுவாக அரசு ஆவணங்களில் ஏதேனும் திருத்தம் இருக்கும் பட்சத்தில் அதனை திருத்தும் அலுவலர் அருகில் கையொப்பம் செய்வது வழக்கம் என்றால் சரிதான். மேலே குறிப்பிடப்பட்டுள்ள நீ.ம.சா.ஆ.3 ல் பக்கம் 9 ல் உள்ள மேல் பகுதியில் நிரப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் திருத்தம் செய்யப்பட்டு எழுதப்பட்டுள்ளது ஆனால் அதில் அரசு அதிகாரியின் கையொப்பம் எதுவும் இல்லை.

நீ.ம.சா.ஆ.3 ல் பக்கம் 11 ல் முனியம்மாள் என்பவர் அலமேலு, க/பெ. பூங்காவனம் என்பவர்களது ஒரே வாரீசு என வரி அதில் உள்ளது என்றால் சரிதான். 1993 ம் ஆண்டு இறந்த நபருக்கு 2007 ல் அதாவது 15 ஆண்டுகள் கழித்து வாரீசு சான்றிதழ் மனுவை செய்துள்ளார்கள் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் நீ.ம.சா.ஆ.3 ல் பக்கம் 13 ல் அலமேலு அம்மாளின் இறப்பு சான்றிதழ் 1996 ஆம் ஆண்டு வழங்கப்பட்டுள்ளது

என்றால் சரிதான். மேற்படி இறப்பு சான்றிதழில் இந்த இறப்பு சான்றிதழ் யார் மனு செய்து வாங்கினார்கள் என்ற விவரம் குறிப்பிட்டு இருக்கும்மா என்றால் இல்லை.

நீ.ம.சா.ஆ.1 ல் பக்கம் 7 ல் உள்ள மனுவில் முனியம்மாள் என்பவர் 03.07.1996 ல் இறந்த சந்தியம்மாள் மற்றும் குப்புசாமி தம்பதியாருக்கு தான் மட்டுமே வாரிசு என குறிப்பிட்டு மனு செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி மனுவின் பேரில் விசாரணை செய்து பின்னர் முனியம்மாள், பேபி, வசந்தா என்பவர்கள் வாரிசு என சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி மனுவுடன் முனியம்மாள் அவரது ரேஷன் கார்டில் நகலை வைத்துள்ளார் அதில் சந்தியம்மாளின் பெயர் இடம் பெற்றுள்ளது என்றால் சரிதான்.

நீ.ம.சா.ஆ.3 வேறு ஒரு நபருக்கு கொடுக்கப்பட்ட ஆவணம் என்றாலும் அதில் திருத்தம் செய்து போலியாக முனியம்மாள் பெயரில் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நீ.ம.சா.ஆ.3 சட்டத்திற்கு புறம்பாக உரிய விசாரணை செய்யாமல் தவறாக வழங்கப்பட்ட ஆவணத்தின் பின் ஆவணங்கள் என்றால் சரியல்ல. 1996 ம் ஆண்டு வாரிசு சான்றிதழ் கோரி பெற்றபிறகு மறுபடியும் 1993 ம் ஆண்டு இறந்த நபருக்கு 2007 ம் ஆண்டு வாரிசு சான்றிதழ் கோரி அதன் அடிப்படையில் வாரிசு சான்றிதழ் பெறமுடியாது என்றால் சரிதான். அவ்வாறு வழங்கமுடியாது. நீ.ம.சா.ஆ.3 ன் அடிப்படையில் தான் பி.வா.சா.ஆ.26 வழங்கப்பட்டது என்ற காரணத்தினால் பி.வா.சா.ஆ.26 ம் போலியாக தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் தெரியாது.

**நீ.ம.சா.1 பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நீ.ம.சா.ஆ.1 ல் பக்கம் 13 ல் மனுதாரர் முனியம்மாளின் வாக்குமூலத்தில் வாரிசுகள் என முனியம்மாள், பேபி மற்றும் வசந்தாவின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நீ.ம.சா.ஆ.2 ல் பக்கம் 11 ல் திருத்தங்கள் உள்ளது ஆனால் எந்தவித கையொப்பமும் இல்லை. மேற்படி காரணத்திற்காக இந்த ஆவணம் போலியாக தயார் செய்யப்பட்டது என நிர்ணைக்க முடியுமா என்றால் முடியாது. அதே போல் நீ.ம.சா.ஆ.3 ல் சில வார்த்தைகள் நுழைத்து எழுதப்பட்டுள்ளது மற்றும் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளது அந்த காரணத்திற்காக அந்த ஆவணத்தை போலியான ஆவணம் என குறிப்பிட முடியுமா என்றால் குறிப்பிட முடியாது.

உரிய விசாரணை செய்யப்பட்டு தான் பி.வா.சா.ஆ.26 வழங்கப்பட்டது என்றால் நான் ஆவணங்கள் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன். அது குறித்து எனக்கு தெரியாது. எண்களில் திருத்தம் மற்றும் பிழை செய்வது அலுவலர்களின் கவனக்குறைவு என்றால் சரிதான். மேற்படி ஆவணம் உண்மையான ஆவணம் என்றாலும் அது எங்களது அலுவலகத்தில் வழங்கப்பட்டது என்றாலும் சரிதான்.

**விசாரணை முடிக்கப்பட்ட நேரம் 01.27 PM**

**Sd./–R.கிருத்தியா,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,**
**உத்திரமேரூர்.**